வந்திருக்கிறது. மற்றக் கோவில்களின் உபரி நிதியிலிருந்து, அரசு ஆலயத் திருப்பணிக்கு ஒதுக்கும் நிதியிலிருந்து ஈடு செய்து, விரைவில் வேலை தொடங்கப் பெற்று, முடிக்கப்பெறும்.

Libraries in Temples

* 212. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the number of temples which have libraries in Tamil Nadu ?

திருக்கோயில்களில் நூலகங்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

தமிழகத்தில் எத்தனை திருக்கோயில்களில் நூலகங்கள் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 202 கோயில்கள்.

திரு. தி. க. சண்முகம்: தலைவர் அவர்களே, திருக்கோவில்களில் உள்ள நூலகங்களில் சமய சம்பந்தமான நூல்கள் இருக்கின்றனவா அல்லது மற்றும் தமிழ் இலக்கியம் சம்பந்தமான நூல்களை வைக்க அனுமதி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இந்து சமயத்தைப் பரப்பும் நூல்களும், தமிழில் இலக்கிய ஆராய்ச்சி நூல்களும், இலக்கியத் துறை சம்பந்தமான நூல்களும் வைத்திருக்கிறார்கள்.

Surplus Funds with the Hindu Religious and Charitable Endowments Department

* 213. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the amount of surplus funds that is available at present with the Hindu Religious and Charitable Endowments Department.

இந்து அறநிலைய ஆட்சித் துறையில் இருக்கும் உபரி நிதி

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இந்து அறநிலைய ஆட்சித் துறையில் தற்போது இருக்கும் உபரி நிதி எவ்வளவு ?